www.tamilarangam.net

# போர் நிறுத்தமும் பொய்மைகளும்

பார்த்திபன்

சுகந்தம் வெளியீடு
யாழ். பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்
யூலை, 1985

2-00

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அட்டைப்படம் பற்றிய எமது கருத்து**

போர் நிறுத்தம் என்ற பெயரில் தமிழ் மக்களை அடக்கி விட்டதாக சிறீலங்கா அரசாங்கம் கருதுகிறது. ஆனால் போர் நிறுத்தத்தால் சுதந்திரமோ, பாதுகாப்போ கிடைக்கப்போவதில்லை. எனவே, எமக்காக நாமே போராடவேண்டும்.



களக் குடியேற்றத் திட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளும் இதே பாணியிலேயே எதிர்கொள்ளப்படும் எனப் பகிரங்கமாக அறிவித்தார்கள்.

மதவாச்சியில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலைத் தொடர்ந்து அரசின் திட்டங்களால் தாமே பலியாகவேண்டிய நிலைமை ஏற்படலாம் என்பதை உணர்ந்த சிங்கள மக்கள் இதனால் பின் வாங்கினர்; அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஆதரவு இல்லாமற் போயிற்று. கூட்டுமொத்தமாகப் பார்க்கும்போது ஆயுதப்படையினருக்கே பாதுகாப்பில்லாத நிலையில் சிங்கள குடியேற்றவாதிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதென்பது இயலாத காரியம் என்பது உணர்த்தப்பட்டது.

## தமிழீழப் பொதுமக்கள் தாக்கப்படல்

அரசாங்கம் தனது இனவிகிதாசாரக் குடியேற்றத் திட்டம் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டமையை அனுபவ ரீதியாகக் கண்டதைத் தொடர்ந்து தமிழீழப் பொதுமக்கள் மீது இராணுவத் தாக்குதல்களை மேற்கொண்டது. இவ்வாறான தாக்குதல்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆங்காங்கும் குடாநாட்டிற்கு வெளியே பரவலாகவும் மேற்கொள்ளப்பட்டன. குடாநாட்டிற்குள் இடம்பெறும் இத்தகைய தாக்குதல்கள் உலகின் முன்னணி வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டு பலரது கவனத்தையும் ஈர்ப்பதாக அமைந்துவிடுவதால் அரசாங்கம் மிக விழிப்பாக இத்தகைய தாக்குதல்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்தத் தொடங்கியது.

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலைத் தமது சீவனோபாயமாகக் கொண்ட தமிழ் மக்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயத் தொழிலைத் தமது சீவனோபாயமாகக் கொண்ட தமிழ் மக்களும் வாழ்ந்த கிராமங்கள் ''தீவிரவாதிகளைத் தேடுதல்'' என்ற போர்வையில் சுற்றி வளைக்கப்பட்டன. பெருமளவில் அப்பாவி மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர், பலர் சுட்டுக் காயப்படுத்தப்பட்டனர். அப்பாவி மக்கள் கைது செய்யப்பட்டனர், பல வீடுகள் வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டன, ஏராளமான சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன, பொதுமக்களது நெற்களஞ்சியங்கள், மீன்வாடிகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. இந்த இராணுவ அடாவடித்தனங்களின் ஒரு பகுதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாக கிழக்கு மாவட்டத்தில் தமிழ்—முஸ்லீம் மக்களுக்கிடை
யில் விசேட அதிரடிப்படைப் பிரிவினர் கலவரங்களை உண்டுபண்ண
ணினர். மன்னார்ப் பகுதியில் பெருமளவு மக்கள் அகதிகளாக
தமிழ்நாட்டிற்குச் சென்றனர். முல்லைத்தீவு, மட்டக்களப்பு
மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் அகதி முகாம்
களில் தஞ்சம் புகுந்தனர்.

இவ்வாறாக அப்பாவிப் பொதுமக்களை அவர்களது நிரந்தர
மான வசிப்பிடங்களிலிருந்து அப்புறப்படுத்தி அகதி முகாம்களை
நாடிச் செல்லவைப்பதன் மூலம் போராளிகளைப் பொதுமக்களி
டமிருந்து தனிமைப்படுத்தி, போராளிகளுக்குத் தேவையான
உணவு, உறைவிடம் முதலான ஆதார தேவைகளைத் துண்டிக்கச்
செய்வதன் மூலம் அவர்களைப் பணியவைத்து அழித்துவிடலா
மென' அரசாங்கம் கனவு கண்டது.

## ஏப்ரல் -- மே மாதத் தாக்குதல்கள்

அரசாங்கம் எதிர்பார்த்தமைக்கு மாறாக கடந்த ஏப்ரல், மே
மாதங்களில் ஏககாலத்தில் பரவலாகவும் பல்வேறு முனைகளிலி
ருந்தும் பல்வேறு இயக்கங்களால் தாக்குதல் நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டன. சிறீலங்காவின் இராணுவம், கடற்படை,
விமானப்படை, விசேட அதிரடிப் பொலிஸ்படை, பொலிஸ் நிலை
யங்கள் மீதான ஒழுங்குமுறையான தாக்குதல்கள் அரசின் பாது
காப்புப் படையினரைப் பெருமளவில் பலமிழக்கச் செய்ததோடு
நிலைகுலையவும் வைத்தன. இத்தகைய முறையில் ஏககாலத்தில்
பல்வேறு இயக்கங்களால் பல முனைகளிலான தாக்குதல்கள் இத
ற்கு முன்னர் மேற்கொள்ளப்படாத அம்சம் என்பது குறிப்பிடத்
தக்கது.

கடந்த ஏப்ரல், மே மாதத் தாக்குதல்களின்போது விடுதலைப்
புலிகளால் 16 இடங்களில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன
ஈழப் புரட்சியமைப்பு (EROS) 5 தாக்குதல்நடவடிக்கைகளை மேற்
கொண்டது. தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) 2 தாக்குதல் நட
வடிக்கைகளையும் ஈழமக்கள் புரட்சிர விடுதலை முன்னணி (EPRLF)
ஒரு நடவடிக்கையையும் செம்படை இயக்கத்தினர் (RFTE) ஒரு
நடவடிக்கையையும் மேற்கொண்டனர். தமிழீழ விடுதலை இயக்
கங்களால் மேற்கொள்ளப்பட்ட வேறுசில நடவடிக்கைகள் இன்

போர் நிறுத்த உடன்படிக்கை (Ceasefire) எனப் பொதுவாக
'வும், இது போர்நிறுத்த உடன்படிக்கையல்ல; இனப்பிரச்சினைக்கு
அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக பேச்சுவார்த்தைகளை
ஆரம்பிப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு
பகைமையை வளர்க்கும் வன்செயல்களைக் கைவிடல்'' (A Cessati-
on of hostile incidents to constitute a proper climate to resu-
me dialogue for political solution to the ethnic problem) என
தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியால் வர்
ணிக்கப்பட்டதான அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப
டாதிருப்பதான இச் சூழ்நிலை பற்றிய வரலாற்றுப் பின்னணியோடு
கூடியதான கண்ணோட்டமே இப்பிரசுரத்தின் உள்ளடக்கமாகும்.

## சர்வகட்சி மகாநாட்டின் பின்

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து தீர்வு
காண்பதற்காகக் கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாடு ஒரு முடிவும்
எடுக்காது முடிவுற்றதைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்
வாக இனவிகிதாசாரக் குடியேற்றம் பற்றியதமது கருத்தை ஜனாதிபதி
ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்த ஆண்டு [1985] தை மாதம் ஆனம
டுவ என்ற இடத்தில் இடம்பெற்ற பாடசாலைப் பிள்ளைகளு
க்கு நடப்பு ஆண்டுக்கான புத்தகங்களைப் பகிர்ந்தளிக்கும்
வைபவத்தில் வெளியிட்டார்.

அதாவது, இத்திட்டத்தின்படி ஓமந்தை தொடக்கம் ஆனை
யிறவு வரையிலுள்ள தமிழ் மக்களது பாரம்பரிய நிலத்தில் சுமார்
இரண்டு லட்சம் சிங்கள மக்களைக் குடியேற்றுவதன் மூலம் பிரி
ந்து வாழவேண்டும் என்ற வடபகுதி மக்களின் ''தனிமை உணர்
வை'' நீக்கமுடியும் எனவும், சிங்கள மக்களோடு அவர்கள் இரண்
டறக்கலந்து வாழமுற்படின் ''தேசிய வாழ்வில்'' அவர்களும் பங்கு
பற்றத் தொடங்கிவிட்டால் தீவிரவாதிகளது நடவடிக்கைக
ளுக்குத் தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவு இல்லாமல் போய்விடும்
எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத்திட்டம் பற்றிய அறிவிப்பு வெளிவந்தகையோடு தேசிய
பந்தோபஸ்து அமைச்சரும் இத்திட்டம் செயல்படுத்தப்படவிருக்
கும் விதம்பற்றி அறிவித்தார். அதாவது சிங்களப் பகுதிகளி
லுள்ள ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் தலா ஆயிரம் பேர் வீதம்
தெரிவு செய்து ஆயுதப் பயிற்சி அளித்த பின்னர் அவர்களைத் தமி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ழ்ப் பிரதேசங்களில் குடியமர்த்தி அவர்களின் பாதுகாப்பு நிமித்தம் ஆயுதங்களும் வழங்கப்படவிருப்பதாகக் குறிப்பிட்டதோடு அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இதற்குத் தேவையான நிதியை பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கினார்.

ஜனாதிபதி ஜே. ஆர். 1985ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம்20ஆம் திகதி பாராளுமன்றத்தில் தமது அரசாங்கத்தின் கொள்கை விளக்கத் திட்டவுரையில் மேற்படி குடியேற்றத் திட்டம் பற்றிக் குறிப்பிடும்போது ஒரு கட்டத்தில் பின்வருமாறு கூறினார்:

"If we do not occupy the broder,
the border will come to us."

''நாம் எல்லைப்புறங்களில் குடியேறாவிடின்,
எல்லை எம்மை நோக்கி வரும்.''

தமிழ் இனத்திற்குச் சொந்தமானதும் அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருவதுமான நிலத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றித் தமிழ்மக்களது தனித்துவத்தைச் சிதைக்கும் கபட நோக்கம் கொண்ட இத்திட்டத்திற்குத் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. தென்னிலங்கையைச் சேர்ந்த சில இடதுசாரி இயக்கங்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. கலவானத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் சரத் முத்தெட்டுவேகம தமது கட்சியின் எதிர்ப்பை பாராளுமன்றத்திற்குள்ளே தெரிவித்தார்.

## விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகள் சிறீலங்கா அரசின் இந்தக் குடியேற்றக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக நேரடி நடவடிக்கைகளில் இறங்கினார்கள். 13-3-85 அன்று மதவாச்சி பொலிஸ் நிலையத்தின் மீதும் புகையிரத நிலையத்தின் மீதும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு எதிர்காலத்தில் தமிழ்ப்பிரதேசங்களில் அரசாங்க ஆதரவோடு மேற்கொள்ளப்படும சகல சிங்



''பயங்கரவாதிகளின் எத்தகைய வன்முறைச் செயல்களையும் முறியடிக்கக் கூடியதான அளவில் விரைவில் எம்மை நாம் முழுமையாக ஆயுதரீதியாக பலப்படுத்திக் கொள்வோம் என நான் நினைக்கிறேன்.''

ஆகவே அரசாங்கத்திற்கு இராணுவ ரீதியாகத் தன்னைப்பலப்படுத்திக் கொள்ள கால அவகாசம் தேவைப்படுகிறது. சர்வகட்சி மகாநாட்டின் முறிவு காரணமாக வெளியுலகில் தன்னை நியாயப்படுத்திக் கொள்ள முடியாமையும், அதனால் வெளிநாட்டு உதவிகளில் ஏற்பட்ட தடங்கல்கள், இன விகிதாசாரக் குடியேற்றத் திட்டம் போராளிகளால் முறியடிக்கப்பட்டமை, சர்வதேச சந்தையில் வீழ்ச்சியடைந்து செல்லும் இலங்கைத் தேயிலையின் விலையை நிலைநிறுத்த முடியாமை, அண்மைக் காலத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களால் இராணுவ ரீதியாக ஏற்பட்ட இழப்புகள் இவை யாவற்றிலுமிருந்தும் மீண்டும் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும் பலப்படுத்தி ஒரு ஸ்திர நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்ளவும் வேண்டுமாயின் ''போர்நிறுத்தம்'' என்ற போர்வையில் ஒரு இடைக்கால ஓய்வை ஏற்படுத்திக் கொள்வதைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் சிறீலங்கா அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இதனால் 18 வார கால போர்நிறுத்த உடன்படிக்கை ஒன்றை இந்திய அரசின் ஊடாக மேற்கொண்டுள்ளதோடு பேச்சுவார்த்தை என்ற பாஷாண படலத்தையும் ஆரம்பித்துள்ளது.

## பேச்சுவார்த்தைகள்

சிறீலங்கா அரசு தன்னை இராணுவ ரீதியாகப் பலப்படுத்திக் கொள்ளத் தேவைப்படும்போதெல்லாம் பேச்சுவார்த்தை என்ற முகமூடியை அணிந்து கொண்டு தன்னை முன்னிலைப்படுத்தி வருகிறது.

இப்பொழுது நடைபெறும் பேச்சுவார்த்தையென்றாலும் சரி, இனி வருங்காலத்தில் நடைபெறக்கூடிய பேச்சுவார்த்தை என்றாலும் சரி தமிழ்மக்களது பிரச்சினையின் தீர்வுக்காக தமிழ்மக்களால் 1977ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட தமிழீழக் கோரிக்கையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒட்டிய பேச்சுவார்த்தைகளுக்கு சிறீலங்கா அரசு ஒருபோதும் முன்வரமாட்டாது. இதேபோல் தற்போது நடைபெறும். பேச்சுவார்த்தைகளின் பின்னணியில் நிற்கும் இந்தியத்தலையீடு காரணமாக தமிழ்மக்கள் சார்பில் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் எந்தப் பிரதிநிதியும் தமிழீழக் கோரிக்கையை ஒருபோதும் வற்புறுத்தமுடியாது.

மறுபுறத்தில் சிறீலங்கா அரசின் சார்பில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் மாவட்டசபைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் குறிப்பிட்டதொரு மாகாணத்துள் இருக்கும் சபைகளை ஒருங்கிணைத்தல் முதலியவற்றையே தமது அரசின் திட்டங்களாக முன்வைப்பார்கள்.

மறுபக்கத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்கனவே வட்டமேசை மகாநாட்டில் அமைச்சர் தொண்டமான் ஊடாக வலியுறுத்திய வடக்கும், கிழக்கும் இணைந்த மாநில சபைத் திட்டத்தை முன்வைப்பார்கள். இதேபோல தீவிரவாத இயக்கங்களும் இதுவே குறைந்தபட்சக் கோரிக்கை எனவும், இதற்குக் குறைந்த எதுவும் தமிழ்மக்களைத் திருப்திப்படுத்தாது எனவும் குறிப்பிட்டு எதற்கும் விட்டுக்கொடுக்காதவர்களாக நிற்கும் பட்சத்தில் சிறீலங்கா அரசு மாகாண சபை திட்டத்தை ஒப்புக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படலாம். ஆனால் வடக்கிற்கு வேறு, கிழக்கிற்கு வேறான மாகாணசபை திட்டத்தையே தனது கூடியபட்ச வழங்கலாக சிறீலங்கா அரசு முன்வைக்கும்.

இந்தக் கட்டத்தில் தமிழ்மக்கள் சார்பிலான பிரதிநிதிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையில் இப்பிரச்சினை தொடர்பில் இணக்கம் காண்பதில் ஒரு இடைவெளி காணப்படுகிறது.

## பொதுசன வாக்கெடுப்பு

இருசாராருக்கும் இடையில் ஏற்படும் இடைவெளியைந்து [illegible] மூன்றாவது சக்தி ஒன்று தலையிடும் பட்சத்தில் கிழக்கு மாகாண மக்கள் வடக்கு மாகாணத்துடன் இணைந்து வாழ விரும்புகிறார்களா என்பதையிட்டு அவர்களது கருத்தை [illegible] பொருட்டு பொதுசன வாக்கெடுப்பு ஒன்றை [illegible] நடத்தும் நிலை ஏற்படலாம்.



னும் உரிமை கோரப்படாமல் இருக்கின்றன. (உதாரணமாக மன்னம்பிட்டி பொலிஸ் தாக்குதல், களுத்துறை வடிசாராயக் கூட்டுத்தாபனம், கோல்பேஸ் கோர்ட் வியாபாரத்தலம் முதலியன நேரக்கணிப்பு குண்டுவைப்பு மூலம் அழிக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம்.

## உயர் அதிகாரிகளின் மறைவு

கடந்த எப்ரல் - மே மாதத் தாக்குதல்களின் போது இடம்பெற்ற இன்னுமொரு முக்கியமான சம்பவம் விடுதலைப் போராளிகளின் இத் தாக்குதல் நடவடிக்கைகளின் போது சிறீலங்காவின் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த பல உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டமையாகும்.

கடந்த நவம்பர் மாதம் தெல்லிப்பளையில் வைத்து கேணல் ஆரியப்பெரும என்ற உயர்.அதிகாரி கண்ணி வெடித்தாக்குதலின் போது கொல்லப்பட்டார். அந்த அதிகாரியின் மறைவால்ஏற்பட்ட இழப்பு சில நூறு சிப்பாய்களை ஒருமித்து இழந்த இழப்பைவிட மிகப்பெரிய இழப்பு எனப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் மதிப்பிட்டுள்ளன. இதனால்தான் அந்த அதிகாரி மறைந்த பின்னர் பிரிகேடியர் அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டு கௌரவிக்கப்பட்டார். பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியான ஆரியப்பெரும அவுஸ்திரேலிய இராணுவப் பல்கலைக்கழகம் ஒன்றில் விசேட பயிற்சி பெற்றவராவர். இவரது தலைமையின் கீழ் வடபகுதியில் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன. இந்த இழப்பை சரிவர ஈடுசெய்யமுடியாத நிலையில் இருந்த சிறீலங்கா அரசுக்கு ஏப்பல் - மே மாதத் தாக்குதல்களின்போது மேலும் பல உயர் அதிகாரிகளை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டமை தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடத்துவதில் பெரும் சிக்கல்களை உருவாக்கின. அவ்வாறு இறந்த அதிகாரிகளின் விபரம் பின்வருமாறு:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| திகதி | தாக்கப்பட்ட இடம் | தாக்குதல் நடத்திய இயக்கம் | கொல்லப்பட்ட அதிகாரியின் பெயர் |
|---|---|---|---|
| 1-4-85 | செங்கலடி கொடுவாமடு | ஈரோஸ் | S. I. வீரதுங்கா உட்பட 5 அதிகாரிகள். இவர் பிரித்தானிய எஸ். ஏ. எஸ். படையால் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டவர். |
| 26-4-85 | மூதூர்கட்டை பறிச்சான்வீதி | விடுதலைப் புலிகள் | லெப்டினன்ட் அமாரியல் |
| 9-4-85 | உடுப்பிட்டி பஸ் நிலையம் | விடுதலைப் புலிகள் | மேஜர் மெண்டிஸ் |
| 22-5-85 | திருமலை நிலாவெளி | விடுதலைப் புலிகள் | விமானப்படை அதிகாரி பிரான்சிஸ்-டி-மெல் |
| 1-6-85 | குச்சவெளி பொலிஸ் நிலையம் அருகே | விடுதலைப் புலிகள் | கடற்படை அதிகாரி |

இவ்வாறாக மிக்க குறுகிய காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புப் படையினருக்குத் தலைமை தாங்கிய பல உயர் அதிகாரிகளின் இழப்பு அரசாங்கத்தைப் பெரும் நெருக்கடி நிலைமைக்கு உள்ளாக்கியது. இந்த உயர் அதிகாரிகளை விட ஏராளமான சிப்பாய்கள், இராணுவ வாகனங்கள், இராணுவத் தளபாடங்கள் முதலியவற்றிலும் பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தாக்குதல்களின் போது பல நவீனரக ஆயுதங்கள் விடுதலைப் போராளிகளால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக ஏற்பட்டுள்ள இழப்பு எத்தகைய பாரதூரமானது என்பதை சிறீலங்காவின் ஜனாதிபதி சப்புகஸ்கந்தையில் 18-5-85 அன்று பொலிஸ் நிலையம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றும் போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

"I feel that very soon we will be fully equipped to meet any violent activity by the terrorists."



இவ்வாறான ஒரு பொதுசன வாக்கெடுப்பு கிழக்கு மாகாணத்தில் (திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை) நடாத்தப்பட்டு அது சிறீலங்கா அரசுக்குத் தோல்வியைத் தருமாயின் அதனால் ஏற்படும் விளைவு வித்தியாசமானது. ஆனால் இத்தகைய ஒரு தோல்வியை சிறீலங்கா அரசு கிழக்கு மாகாணத்தில் சந்திக்கக்கூடியதான நிலைமை இருக்கின்றதா என்பதை நாம் ஆராய்தல் அவசியமாகும்.

1981ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி கிழக்குமாகாண மக்கள் தொகை பின்வருமாறு:

| | மட்டக்களப்பு | திருகோணமலை | அம்பாறை |
|---|---|---|---|
| இலங்கைத் தமிழர்கள் | 2,34,348 | 86,743 | 78,315 |
| சிங்களவர்கள் | 10,646 | 86,341 | 1,46,371 |
| முஸ்லிம்கள் | 79,317 | 74,403 | 1,61,481 |

கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் ஏறக்குறைய சம அளவிலேயே மூன்று இன மக்களும் வாழ்கிறார்கள். இந்நிலையில் வடக்குடன் இணைவதற்கு சிங்கள மக்களது வாக்குகள் சம்மதம் தருவதாக இருக்கப் போவதில்லை; இது திட்டவட்டமானது.

## முஸ்லிம் மக்களது நிலைப்பாடு

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் மாகாண சுயாட்சியையே வலியுறுத்தியுள்ளார்கள். ஆனால் இந்தியாவிற்குச் சென்ற H W. ஜெயவர்த்தன தலைமையிலான சட்டக்குழு கிழக்கு மாகாணத்திற்கு சுயாட்சி வழங்குவது தொடர்பாக ஆராயவில்லை. கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட சபைகளுக்கு கூடிய அதிகாரம் வழங்குவது தொடர்பாகவே அங்கு ஆராயப்பட்டது. முஸ்லிம் மக்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி சிறீலங்கா அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் மக்களோடு சேர்ந்து பங்கேற்காமையும் அதே வேளையில் மறுபக்கத்தில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களை அவர்களது கோரிக்கையோடு இணைத்துப் போகாமையும் முஸ்லிம் மக்கள் ஆயுதப் போராட்டத்தில் முழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மையாகப் பங்கேற்காமையும் இந்த நிலைமைக்குக் காரணிகளாகும். முஸ்லிம்களுக்கு எதிராகக் கடந்த காலங்களில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள் யாவற்றுக்கும் எதிராக கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் போராட்டங்களை நடாத்தாதவாறு கொழும்பு முஸ்லிம் வர்த்தகத் தலைமைகள் தடைபோட்டே வந்துள்ளன. இஸ்ரேலிய மொசாட் படைகள் இலங்கைக்குள் ஊடுருவியபோது அதற்கெதிராக கிழக்கிலங்கை முஸ்லிம் மக்கள் போராட்டங்களை நடத்தியபோது இலங்கை அரசு அதனை அடக்கி ஒடுக்குவதில் தீவிரமாகச் செயற்பட்டது. பல முஸ்லிம்கள் இவ்வாறான அடக்குமுறையின்போது அரசபயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அப்பாவி முஸ்லிம்கள் பலமாகத் தாக்கப்பட்டு இம்சைப் படுத்தப்பட்டனர். ஆனால் கொழும்பு முஸ்லிம் வர்த்தகத் தலைமை இது தொடர்பில் அரசாங்கத்துடன் இணைந்து இஸ்ரேலிய சியோனிஸவாதிகளுக்குத் துணை போனதே தவிர கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்ளவில்லை. அவர்கள் அநியாயமாகச் சுடப்பட்டமையை ஒட்டி ஒரு வார்த்தைதானும் பேசவில்லை.

பிரித்து ஆள்; இஸ்லாமியனை அழி! என்ற குறிக்கோளையுடைய இஸ்ரேலிய சியோனிஸவாதிகளை. இலங்கை முஸ்லிம்கள் மட்டுமல்லாமல் முழு இஸ்லாமிய உலகமே எதிர்க்கும்போது, இங்கு அமைச்சர் எம். எச். முகம்மது இஸ்ரேலிய மொசாட்டுடன் நெருங்கிய உறவினை வைத்திருந்தார் என்பதும், கிழக்கிலங்கையில் தமிழ் - முஸ்லிம் கலவரத்தின் பின்னணியில் 'மொசாட்'டுடன் சேர்ந்து முகம்மதுவும் செயற்பட்டிருக்கின்றார் என்பதும் கவனிக்கத்தக்கது. 1985-01-21 இல் கொழும்பிலுள்ள லங்கா ஒபரோய் ஹோட்டலில் வைத்து அமைச்சர் முகம்மது 'மொசாட்'டின் மிக முக்கியமான புள்ளியான அவ்ரஹாம் யோஃபி(Avraham Xofie)யைக் சந்தித்து இரகசியப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். மேலும் கிழக்கில் தமிழ் - முஸ்லிம் கலவரத்தின் முன்பாகவும் கொள்ளுப்பிட்டியில் உள்ள அமெரிக்கத் தூதுரகத்தில் அமைந்துள்ள இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவிற்குப் பலதடவைகள் சென்று ஆலோசனைகள் பெற்றுள்ளார் என்றும் தெரியவருகிறது. அது முஸ்லிம்களின் கொழும்புத் தலைமையானது, அரசைச் சார்ந்திருப்பதால் ஏற்படக்கூடிய சுயலாபத்திற்காகத் தமது இனத்தையே அழிவிற்கு இட்டுச் செல்லவும் தயங்காது என்பதையே புலப்படுத்துகிறது.

முஸ்லிம்களது பாரம்பரியத் தாயகமான அம்பாறை மாவட்ட திகாமடுல்ல எனச் சிங்களப் பெயராக மாற்றம் செய்யப்



பட்டுள்ளது. சிங்களப்பிரதேசங்களான மகாஓயவும் பதியத்தலாவவும் அம்பாறையுடன் இணைக்கப்பட்டு சிங்களவர்கள் பெருந்தொகையாகக் குடியேற்றப்பட்டு வருகின்றனர். அம்பாறை மாவட்டத்தில் 1947ஆம் ஆண்டு மூவாயிரம் சிங்களவர்களே காணப்பட்டனர். ஆனால் 1981ஆம் ஆண்டு குடிசனக் கணக்கெடுப்பின்படி 1 46,371 சிங்களவர்கள் அம்பாறை மாவட்டத்தில் இருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது அம்பாறை மாவட்டத்திலுள்ள மல்வத்தை தொட்டாச்சுருங்கிவட்டை, பெரியவிகாரைக் கண்டம் முதலான இடங்களில் உள்ள முஸ்லிம் மக்களது நிலங்களைச் சிங்களவர்கள் ஆக்கிரமித்துக்கொண்டு இருக்கிறார்கள். நரைச்சோலைக்கண்டத்தில் முஸ்லிம்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட ஆயிரம் ஏக்கர் நிலத்தில் இப்போது சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். முஸ்லிம்களுக்குச் சொந்தமான 10,250 ஏக்கர் புராதன நிலம் சுவீகரிக்கப்பட்டு திகவாபி திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ளது. சேனநாயக்க சமுத்திரத்திலும் ஏனைய குளங்களிலும் நன்னீர் மீன்பிடித் தொழில் செய்த முஸ்லிம்கள் சிங்களவர்களால் விரட்டியடிக்கப்பட்டனர். இறக்காமம், உல்லை, எலவை போன்ற இடங்களில் உள்ளூர் மீனவர்களுக்கென அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட மீனவர் குடியேற்றத்திற்கான வீடுகள் காலி, மாத்தறை போன்ற இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்களவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் மாவட்ட அமைச்சரும் அரசாங்க அதிபரும் சிங்களவர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் இருவரதும் விசேட உத்தரவின் பேரில் பொத்துவில் உதவி அரசாங்க அதிபர் பொத்துவில் பொலிசாரின் உதவியுடன் சிலகாலத்திற்கு முன் முஸ்லிம் குடியேற்றத்திற்குள் இருக்கும் முஸ்லிம்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள்.

இவ்வாறாக அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு அரசாங்கமும், அரசாங்கத்தினால் ஏவிவிடப்பட்ட கூலிப்படைகளும் சொல்லொணாக் கொடுமைகளை இழைத்தபோதும் கொழும்பு வர்த்தக முஸ்லிம் தலைமையால் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்கு ஒருவிதமான விமோசனமும் கிடைக்கப்போவதில்லை என்பதையே துலாம்பரமாகக் காட்டி நிற்கின்றன.

ஆகவே கிழக்கிலங்கை முஸ்லிம் மக்கள் கொழும்பு வர்த்தகத் தலைமையை நிராகரித்து கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களையே கொண்ட தலைமை ஒன்றைக் கட்டி எழுப்ப இனியும் காலதாமதம் செய்யக்கூடாது. இந்நிலையில் தமிழ்மக்களோடு இணைந்து தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகப் போராட முன்வரவேண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டும். இலங்கைத் தீவில் சிங்களத் தேசிய இனத்திற்கு அடுத்தபடியாகப் பலம்வாய்ந்த இனமாக இருப்பது தமிழ்த் தேசிய இனமேயாகும். ஆகவே பேசும் மொழியால் தமிழ் மக்களோடு ஒன்றுபட்ட முஸ்லிம்கள் தமிழ்த் தேசிய இனத்தோடு ஒன்றுபட்டு வாழும் சூழ்நிலை ஏற்படுமாயின் இருபகுதியினருக்குமிடையில் பாரிய முரண்பாடுகள் ஏற்படுவதற்கு இடமேயில்லாமல் போய்விடும். தமிழ்த்தேசிய இனம் தனது விடுதலைப் போராட்டத்தில் கணிசமான முன்னேற்றத்தையடைந்து வெற்றியை நோக்கி விரைந்துகொண்டிருக்கிறது. இற்றைவரை சிங்கள அரசாங்கத்தால் தமிழ் இளைஞர்களது வீரம் செறிந்த போராட்டத்தை தோற்கடிக்கமுடியவில்லை. தமிழர்களது போராட்டத்திற் காரணமாக முஸ்லிம்களை பலமாக நசுக்க சிங்கள அரசால் முடியாமல் இருக்கிறது. தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டுவிடின் அடுத்ததாக சிங்களவர்களால் முஸ்லிம் மக்கள் பலமாக நசுக்கப்படுவார்கள். முஸ்லிம் மக்களை நசுக்குவது மிகவும் சுலபமாக அமைந்துவிடும். ஆகவே முஸ்லிம் மக்கள் பின்னர் விளையக்கூடிய அபாயங்களை உணர்ந்துகொண்டவர்களாகவும் முஸ்லிம்களது கையிலிருந்து நழுவிச் சென்றுகொண்டிருக்கும் அம்பாறை மாவட்டத்தை மீட்டெடுத்து எதிர்கால முஸ்லிம் சந்ததியினர் நிம்மதியாக வாழ தமிழர்களோடு முழுமையாக இணைந்து போராட முன்வரவேண்டும். அதுவே முஸ்லிம் சமுதாயத்தினருக்கு எதிர்காலத்தில் பாதுகாப்பாகவும், பக்கபலமாகவும் அமையும்.

1985 ஏப்பிரலில் கிழக்கிலங்கையில் தமிழ்மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் சிறீலங்கா அரசின் சூழ்ச்சிகளால் சில விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெற்றமை மிகவும் துரதிஷ்டவசமானது. இந்தக் கலவரத்தின் பின்னணியில் தமிழ்த் தீவிரவாதிகளுக்கும் பங்குண்டு என முஸ்லிம் மக்கள் எழுதுகிறார்கள். முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்ட இந்தக் கசப்புணர்வுகளின் விளைவாக ஏற்பட்ட மனப்புண்கள் இன்னும் ஆறாத நிலையிலேயே உள்ளன. இந்தக் கசப்புணர்வுகள் சரிவர நீங்காத நிலையில் ஒரு பொதுசன வாக்கெடுப்பு நடாத்தப்படுவதால் ஏற்படக்கூடிய விளைவுகளை நாம் கருத்தில்கொண்டு மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். ஆகவே கிழக்கிலங்கையில் இருக்கும் இன்றைய நிலையில் உடனடியாக ஒரு பொதுசன வாக்கெடுப்பு நடாத்தப்படுமாயின் அங்கு அரசாங்கத்தைத் தோற்கடிக்கக்கூடியதான நிலைமை கஷ்டமாகவிருக்கும்.

கடந்த காலங்களில் பின்விளைவுகளைச் சரிவர முன்கூட்டியே உணர்ந்துகொள்ளாது நடந்துகொண்ட அனைவரும் முஸ்லிம் மக்களையும் எமது விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக இணைத்துக்கொண்டு சிறீலங்கா அரசின் இனரீதியான அடக்குமுறைகளுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் கவனம் செலுத்தவேண்டும்.



மிக அண்மையில் வெளியான முஸ்லிம் மாத இதழான அல்ஹஸனாத் (மலர்: 15, இதழ்: 5) பின்வரும் அறைகூவலை கிழக்கிலங்கையில் வாழும் தமிழ் — முஸ்லிம் சமுதாயத்தினருக்கு விடுத்துள்ளது.

"……தூர நோக்கோடு தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் செயற்பட வேண்டும். ஏனெனில் இரண்டு சிறுபான்மைச் சமூகத்தின் வீழ்ச்சியானது இரு சமூகத்தவரும் விரும்பாத, மிகவும் வருந்தத்தக்க பல விளைவுகளுக்கு வழி ஏற்படுத்திக்கொடுத்துவிடமுடியும். ஏற்கனவே கொடுமனம் படைத்தோர் அத்தகைய முயற்சிகளுக்கு வித்திட்டு செயல்பட்டு வருவதை அல்ஹஸனாத் மூலம் நாம் பலமுறை எச்சரித்து வந்துள்ளோம். அப்படியொரு நிலை தோன்றுமானால் ஒரு தமிழனோ அல்லது முஸ்லிமோ எந்தப் பெரிய இலாபத்தையும் அடையப்போவதில்லை. மாறாக மாற்றானிடம் எதுவித நிபந்தனையுமின்றி மண்டியிட்டு வாழும் நிலை உருவாகிவிட முடியும் அதன் பின் கவலைப்படுவதால் எதுவும் நடந்துவிடப்போவதில்லை.

## கிழக்கிலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள்

கிழக்கிலங்கையில் யாழ்ப்பாணத் துவேஷத்தைக் கிளப்பி அரசியல் நடாத்திவரும் அரசியல்வாதிகளுள் யு. என். பி. அரசின் அமைச்சரவையில் கொலு வீற்றிருக்கிறார்கள். இவர்களும் இவர்களைச் சார்ந்தவர்களும் தமது அரசியல் லாபம்கருதி வடக்கையும், கிழக்கையும்பிரித்து பிரதேச உணர்வைத் தூண்டி தமிழ் மக்களைப் பிரித்து அழிக்கும் சிங்கள அரசாங்கத்திற்கு துணை போவார்கள். இவர்களைப் போன்ற பிரதேசவாத உணர்வுகளைக் கொண்டவர்களும் விலைக்கு வாங்கப்பட்டு பொதுசன வாக்கெடுப்பு ஒன்றின்போது வடக்கையும் - கிழக்கையும் பிரிக்கப்பயன்படுத்தப்படலாம். ஆகவே தமிழ் மக்களைப் பலியிட்டு தமது சொந்த வாழ்வை மேம்படுத்திவரும் சந்தர்ப்பவாத அரசியல் பிரமுகர்களது அரசியல் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களைச் சரியான முறையில்

www.tamilarangam.net



அரசியல்மயப்படுத்தும் நிலைக்கு நீண்டகாலம் தேவைப்பட லாம். ஆகவே பொதுசன வாக்கெடுப்பு ஒன்றுக்குச் சம்மதம் தெரிவிப்பதே எமது கோரிக்கையைப் பலவீனப்படுத்துவதோடு பெரியதொரு அரசியல் விபத்தாகவும் அமைந்துவிடக்கூடும், என்பதையும் கருத்தில் எடுக்கவேண்டும்.

## அயர்லாந்து தரும் பாடம்

இச்சந்தர்ப்பத்தில் ஏறத்தாழ 750 ஆண்டுகால விடுதலைப் போராட்ட வரலாறு கொண்ட அயர்லாந்துப் போராட்டத் தின் ஓரம்சம் பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமாகும். 1919 ஆம் ஆண்டு இடம்பெற்ற தீவிரமான ஆயுதப் போராட்டத்திற்கு ஈடுகொடுக்கமுடியாது, பிரித்தானிய ஆட்சியாளர் பேச்சுவார்த் தைக்கு முன்வந்தனர். அதன்பயனாய், அயர்லாந்தின் தென் பகு திக்கு டொமினியன் அந்தஸ்து (Dominion Status) வழங்கவும் வடபகுதி பிரித்தானியாவுடன் இணைக்கப்படவும் முடிவானது. அவ்வாறு அயர்லாந்தை இரு கூறுகளாக்குவதை அயர்லாந்துப் போராளிகளில் ஒரு பகுதியினர் எதிர்த்தனர்; எஞ்சியோர் அங் கீகரித்தனர். அதனால் ஐரிஷ் குடியரசு இராணுவம் (IRA) இரண் டாக உடைந்தது. இருபகுதியினரும் ஒருவரை ஒருவர் எதிர்த் துப் போராடினர். விளைவு, பெரும் உள்நாட்டுப் போரை அயர் லாந்து சந்தித்தது.

ஆங்கிலேயரின் ஆதிக்கத்தினை எதிர்த்துப் போராடி உயிர் நீத்த வீரர்களின் தொகையைவிட, அயர்லாந்துப் போராளிக ளிடையே ஏற்பட்ட மோதலில் இறந்தோர் தொகை அதிகமா கும்,

போராட்டத்தின்போது முன்னணித் தலைவர்களுள் ஒருவ ராய் நின்று போராடிய மைக்கல் கொலின்ஸ் பிரிவினையை அங்கீ கரித்ததன் மூலம் தென்பகுதிப் பிரதமராய் பதவியேற்றார். ஆயி னும், உள்நாட்டுப் போரின்போது (1922-23) மைக்கல் கொலின்ஸ் வீதியில் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி மரணமா னார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வட அயர்லாந்தில் ஆங்கிலேயரின் திட்டமிட்ட குடியேற்றத் தினாலும், (புரட்டஸ்தாந்து) மதமாற்றத்தினாலும் அயர்லாந்தின்



வட, தென் பகுதிகள் எக்காலத்திலும் இணையமுடியாத நிலைமை உருவாக்கப்பட்டது.

எனவே, இலங்கையில் வடக்கு," கிழக்கு என இருதனி மாகா ணங்கள் பிரிக்கப்பட்டால் பிரதேச ரீதியாகவும், இன ரீதியாக வும், இயக்க ரீதியாகவும் முரண்பாடுகள் தோன்ற, தமிழ்பேசும் மக்கள் தமக்கிடையே ஓர் உள்நாட்டுப் போரை — பெரும் அழிவை — சந்திக்க நேரிடும். அதுவே ஆட்சியாளரின் நோக்க மாகும். எனவே, இது விடயத்தில் தமிழ்பேசும் (தமிழ்—முஸ் லிம்) மக்கள் பலியாகிவிடாது தீர்க்கதரிசனத்துடன் செயற்பட வேண்டும்.

இந்த நிலையில் விடுதலைப் போராளிகள் எந்தவொரு பேச்சுவார்த்தையானாலும் சரி, அது எங்கு நடைபெற்றாலும் சரி பேச்சுவார்த்தைக்குப் போகுமுன்னர் எமது விடுதலைப் போரா ளிகள் எதிர்காலத்தில் சந்திக்கக்கூடிய உத்தேச அரசியல் விபத் துக்கள் குறித்து தெளிவாக ஆராய்ந்து அத்தகைய அரசியல் விபத்துக்களிலிருந்து தப்பித்துக் கொள்ளக்கூடிய முடிவுகளை தீர்க்கதரிசனத்தோடு முன்கூட்டியே எடுத்துக் கொண்டபின் னரே சிந்தனைத் தெளிவோடு எத்தகைய பேச்சுவார்த்தைகளை யும் அணுகுதல் வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறோம்.

## போர் நிறுத்தத்தின் பின்னர்

போர் நிறுத்தம் என்று அறிவிக்கப்பட்ட பின்னர் ஜனாதி பதியும் தேசிய பந்தோபஸ்து அமைச்சரும் ஆற்றிவரும் உரைகளும் நடவடிக்கைகளும் இவர்களது உண்மையான நிலையை எமக்கு வெளிக்காட்டி வருகின்றன.

ஜனாதிபதி ஜே. ஆர். 22-6-85 சனிக்கிழமை கெஸ்பாவ விஜயசுந்தரராமய என்ற பௌத்த விகாரை வளாவில் ஆற்றிய உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''சிங்கள மக்களது எந்த உரிமைகளையும் எந்த வகையி லும் பாதிக்காத வகையில் ஏனைய சிறுபான்மையின மக்களது உரிமைகளை எந்த வகையிலும் பாதிக்காத வகையில்தான் தமிழ் மக்களது பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும். அதுவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பயங்கரவாதிகள் தமது பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும். அத்தோடு ஈழம் என்கின்ற கோரிக்கையைக் கைவிட வேண்டும். அவ்வாறு கைவிட்ட பின்னர்தான் பிரச்சினைக்கான தீர்வைப் பாராளுமன்றத்தின் ஊடாகத் தீர்த்துவைப்பேன். அதுவே என்னைப் போன்ற ஒரு ஜனாதிபதி செய்யக் கூடிய ஒரு காரியமாகும்.

## லலித்தின் தென்கொரிய விஜயம்

போர் நிறுத்தம் பற்றிய அறிவிப்பு வந்த கையோடு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் பிரதான இராணுவ ஆலோசகரையும் அழைத்துக் கொண்டு தென்கொரியாவிற்கு விஜயம் செய்தார். இவரது இந்த விஜயம் குறித்து இலங்கை அரசாங்கமும் வெகுஜன தொடர்பு சாதனங்களும் மௌனம் அனுஷ்டித்த போதும் இது இலங்கை அரசு தன்னை இராணுவ ரீதியாகப் பலப்படுத்திக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட விஜயமாகவன்றி வேறு எதுவாகவும் இருக்க முடியாது என்று நாம் உறுதியாக நம்புகிறோம். வெளிநாட்டுப் பத்திரிகைகளும் ஊர்ஜிதம் செய்துள்ளன. பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களது பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அந்தரங்க சுத்தியோடு செயல்ப்படும் ஒரு அரசாங்கமாகவிருந்தால் இவ்வாறு நடந்து கொண்டிருக்குமா?

## ஜே. ஆர். இன் பேட்டி

ஜூன் மாதம் முதல் வாரத்தில் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக உரையாடியதாகக் குறிப்பிட்டுள்ள இலங்கை ஜனாதிபதி இந்தச் சந்திப்பின் பின்னர் முதன்முதலில் ''பார் ஈஸ்டேர்ன் எக்கொனமிக் றிவியூ'' (Far Eastern Economic Roeviw) என்ற ஆங்கில சஞ்சிகையின் பிரபல அரசியல் விமர்சகர் சலமத் அலி (Salamat Ali) அவர்களுக்கு கொடுத்த பேட்டியில் பின்வருமாறு கூறியுள்ளார்.

''வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதை நான் இப்போது கூட எதிர்க்கின்றேன். எப்போதும் எதிர்ப்பேன். பண்டா - செல்வா உடன்படிக்கையில் வடக்கும் கிழக்கும் இணையும் வாய்ப்பு இருந்தது. இப்போது கூட திருமதி பண்டாரநாயக்கா வடக்கையும் கிழக்கையும் இணைக்க உடன்பட்டுள்ளார். ஆனால் நான் இதற்கு ஒருபோதும் உடன்படமாட்டேன்.''



தமிழர்களுக்கென பாரம்பரியப் பிரதேசம் ஒன்று உண்டு என்பதைத் தான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என ஜே. ஆர். குறிப்பிட்டே வருகின்றார். இதனால்தான் இலங்கை முழுவதற்கும் அதிகாரப்பகிர்வு (Devolution of power), அதிகாரப் பன்முகப்படுத்தல் (Decentralisation of power) போன்ற சொற்களைப் பயன்படுத்தி தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை அங்கீகரிக்க மறுத்து வருகின்றார்.

## போர் நிறுத்த நிபந்தனைகள்

போர்நிறுத்தம் பற்றி இலங்கை அரசாங்கம் கோரியபோது தீவிரவாத இயக்கங்களால் பின்வரும் நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

(1) ஆயுதப்படையினரை முகாமிற்குள் கட்டுப்படுத்தி வைத்திருப்பதோடு தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து வாபஸ் பெறுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

2) பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசங்களின் மக்களின் விகிதாசார செறிவுத்தன்மையை மாற்றும் நோக்குடன் அரசாங்க உதவியுடன் செய்யப்படும் சிங்களக் குடியேற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தல்.

(3) அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், தமிழ்க் குடிமக்களை சட்டவிரோதமாகவும் பாரபட்சமான முறையிலும் கைது செய்தலை நிறுத்துதல்

(4) 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னர் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள அவசரகால விதியை அகற்றுதல்.

(5) தமிழ்ப் பிரதேசங்களில் உணவுத் தானியங்கள், எரிபொருள் எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை அகற்றுதல்.

(6) சிறீலங்கா ஆயுதப்படையினர் தமிழ்ப் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அட்டூழியங்களை விசாரணை செய்ய சர்வதேச ஆணைக்குழு நியமிக்கப்படல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நிபந்தனைகளை அரசு மீறுகிறது

போர்நிறுத்த உடன்படிக்கையை மேற்கொண்ட சிறீலங்கா அரசு அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்றாமல் விட்டுள்ளதோடு அதனை மீறியும் வருகின்றது.

ஆயுதப்படைகளை முகாமிற்குள் கட்டுப்படுத்திவைத்து படிப்படியாக வாபஸ் பெறுவதாகக் குறிப்பிட்ட அரசாங்கம் வடக்கு கிழக்கிலிருந்துபடைகளை இற்றைவரை வாபஸ் பெறவில்லை. முகாமிற்குள்ளும் அரசபடைகளைக் கட்டுப்படுத்தி வைக்காமல் அவர்களை வீதிவலம் வர விட்டுள்ளது. போர்நிறுத்தத்தின் பின் 24-6-85 அன்று பூநகரியில் ஒரு இளைஞரும் 3-7-85 அன்று மூதூரில் ஒரு இளைஞரும் ஆயுதப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஆனால் அரசாங்கம் தாம் தீவிரவாதிகளைச் சுட்டதாகக் கூறித் தனது பொறுப்பைத் தட்டிக்கழித்துள்ளது.

அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் இற்றைவரை விடுதலை செய்யப்படவில்லை. பலர்மீது குற்றங்கள் இருப்பதாகவும், அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது. எந்தவொரு நாட்டிலும் அரசியல் தீர்வு ஏற்படும்போது அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவது சட்ட அந்தஸ்து பெற்ற ஒரு வழக்காகும். ஆனால் அரசியல் தீர்வின் பின்னரும் அரசியல் காரணிகளுக்காக கைதிகளை சிறையில்வைத்து சித்திரவதை செய்வது மனிதாபிமானமற்றது மட்டுமல்ல சர்வதேச சட்டக் கோட்பாடுகளுக்கும் முரணானது. இதுவிடயத்தில் விடுதலை இயக்கங்களும் மனித உரிமைகள் தொடர்பான இயக்கங்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும். எந்தவொரு பேச்சுவார்த்தையும் தோல்விகண்டாலும் சிறையில் வாடும் எமது எதிர்காலப்பிரஜைகளான இன்றைய இளம் சிறுர்களின் உயிருக்குப் பெரும் ஆபத்து காத்திருக்கிறது. பெண்கள், பாடசாலை மாணவிகள் கூட இன்னும் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். 1983 ஜூலை கலவரத்தின்போது வெலிக்கடையிலும் 1984 நவம்பர் மாதம் வவுனியா இராணுவ முகாமிலும் பல தமிழ்ச் சிறைக் கைதிகள் கொல்லப்பட்டதைக் கருத்தில்கொண்டு எந்தவொரு பேச்சுவார்த்தையையும் ஆரம்பிக்க முன்னர் சிறையில் வாடும் தமிழ்க் கைதிகளை விடுவிக்க சகல தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.



போர்நிறுத்தம் பற்றிய அறிவிப்பு 19-6-85 வெளியிடப்பட்டது. ஆனால் 23-6-85 தொடக்கம் மேலும் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஊரடங்குச்சட்டம் இற்றைவரை நீக்கப்படவில்லை. கடல் கண்காணிப்புச் சட்டம் முற்றாக வாபஸ் பெறப்படவில்லை.

இவை யாவும் சிறீலங்கா அரசு போர் நிறுத்த நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றவில்லை என்பதையும் அவற்றை மீறி வருவதையும் எடுத்துக்காட்டுகின்றன.

மேலும் பேச்சுவார்த்தைக்குச் செல்லும் அரசின் பிரதிநிதிகள் உயர்மட்டக் குழுவாக அமையாது இருப்பதானது உறுதியான தீர்வு ஒன்று கிடைக்காது என்று அவர்களுக்கே சந்தேகமாக இருப்பதை எடுத்துக்காட்டுவதோடு காலத்தைக் கடத்தி தன்னைப் பலப்படுத்துவதற்கான கால அவகாசத்தைப் பெற்றுக்கொள்ளுவதுமாகும்.

## தமிழர் விடுதலைக் கூட்டணியும் போராட்டமும்

பாராளுமன்றத் தமிழ் அரசியல்வாதிகளினால் கடந்த 35 ஆண்டு காலத்தில் சாதிக்கமுடியாதவற்றினைக் கடந்த 10 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தின் மூலம் வீரமிக்க தமிழ்ப் போராளிகள் சாதித்துள்ளனர் என்பதனை முதலில் கூறிவைக்க வேண்டியுள்ளது. இவ்வாயுதப்போராட்டத்தினால் ஏற்பட்ட அனுகூலங்களைப் பயன்படுத்துபவர்களாகவும், அனுபவிப்பவர்களாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் காணப்படுகின்றனர். பொதுவாக, போராட்டத்தால் எதிரிக்கு நெருக்கடி தோன்றிப் போராட்டம் உயர்ந்தகட்டப் பரிமாணத்தைப் பெறுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போராட்டத்தை மேலும் முன்னெடுக்க முடியாதவாறு எதிரி (ஜே. ஆர்)க்கு உதவி செய்யும் பாங்கில் சமரச முயற்சிகளில் ஈடுபடுவதுதான் கூட்டணியின் கடந்தகால அரசியலாகும். 77 இல் ஜே. ஆர். ஆட்சிக்கு வந்ததிலிருந்து கூட்டணி எந்தவிதமான அரசியல் போராட்டத்தையோ அல்லது போராட்டத்துக்கான எந்தவொரு முன்னேற்படிகளையோ செய்யவில்லை. எனவே தமிழ் மக்களைப் பொறுத்து, எந்தவிதமானதோர் அரசியல் நடவடிக்கைகளிலும், பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட கூட்டணிக்கு உரிமையில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தவகையில் கூட்டணியின் வரலாற்றினைச் சற்று நோக்குவோம். 77 ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு முன்பு அமிர்தலிங்கமும் தொண்டமானும் கொழும்பில் சந்தித்து ஜே. ஆர். உடன் இரகசிய உடன்படிக்கை செய்துகொண்டதாக பாராளுமன்றத்தில் தொண்டமான் மூலம் அம்பலமாகியதை இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

(1) 77 ஆம் ஆண்டுத் தேர்தல் விஞ்ஞாபனத்தின்படி, தாம் வெற்றியீட்டியதும் தமிழீழ தேசிய மன்றம் ஒன்றினை அமைக்கப்போவதாகக் கூறியிருந்தனர். ஆனால் தேர்தலை அடுத்து நடந்த தமிழினப் படுகொலையைக் காரணங்காட்டி தேசிய மன்றம் அமைப்பதனைக் கைவிட்டனர். உண்மையில் தமிழீழப் போராட்டத்தில் விசுவாசமற்றவர்களாகவும் இதனைச் செயற்படுத்த இயலாதவர்களாகவும் இருந்தமையே காரணமாகும்.

(2) 81 ஆம் ஆண்டு மாவட்ட சபை சம்பந்தமான நகல் திட்டம் தயாரிப்பில் இருந்த காலகட்டத்தில் அதன் பயனற்ற தன்மையைப் பொதுமக்களும், குறிப்பாக யாழ். பல்கலைக் கழகத்தினைச் சார்ந்தவர்களும் கருத்தரங்கத்தின் மூலமும் புத்தக வெளியீட்டின் மூலமும் ஆணித்தரமாக வெளிப்படுத்திய பொழுதும் அதனைக் கருத்தில் கொள்ளாது விடுதலைக்கான தங்குமடமாக அதனைத் திரித்துக்காட்டி மாவட்டசபைத் திட்டத்தினை ஏற்றுக்கொண்டு அதனைக் குட்டிப் பாராளுமன்றம் என மக்களை ஏமாற்றி நந்திக் கொடி ஏற்றி, செங்கோல் ஏந்தி ஜே. ஆருக்கு முண்டுகொடுத்தனர்.

(3) 77 ஆம் ஆண்டுத் தேர்தல்தான் சிறீலங்காவில் நாங்கள் பங்குபற்றும் இறுதித் தேர்தல் எனவும தேர்தல் காலங்களில் மார்தட்டினர். ஆனால் மீண்டும் உள்ளூராட்சித் தேர்தலின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையையும் மீறி, மேடை அரசியலுக்கு தமிழ் மக்களை திசைதிருப்பும் முயற்சியில் ஈடுபட்ட பொழுதிலும் மக்கள் வெற்றிகரமாக அதனைப் பகிஷ்கரித்தனர்.

எனவே மொத்தமாகப் பார்க்கும்பொழுது கூட்டணியினர் போராட்டத்தில் ஈடுபடாதது மட்டுமல்லாமல் காலத்துக்குக் காலம் போராட்டங்கள் உச்சமடையும்பொழுதெல்லாம் அவற்றை மழுங்கடிப்பதில்தான் ஈடுபட்டனர். எனவே இவ்வாறான கூட்டணியினர்க்கு போராட்டம் பற்றியோ, தமிழ் மக்கள் பற்றியோ பேசுவதற்கு எந்த உரிமையும் இல்லை. இவ்வாறான சுயமைத்தனமான, துரோகத்தனமான கூட்டணியைச் சகல இயக்கங்களும், மக்களும் சேர்ந்து ஏகமனதாக நிராகரிக்க வேண்டும். எந்தவொரு இயக்கமும் கூட்டணிக்கு முண்டு கொடுப்பது மிகவும் தவறானது. வரலாற்றில் கூட்டணியின் பங்கு துரோகத்தனமானது என்று நாம் வரையறை செய்த பின்பு எவ்வகையிலும் கூட்டணியுடன் கூட்டுச்சேர்வதானது துரோகத்துக்கு முண்டு கொடுப்பதாகவும், துரோகத்தனத்தில் பங்கு கொள்வதாகவும் அமையும். எனவே, துரோகத்தனம் மிகுந்த கூட்டணியை நாம் எல்லாவகையிலும் நிராகரிப்போம். தமிழீழம் அமைப்பது சம்பந்தமாகத் தனது கையாலாகத்தனத்தினையும் தெரிந்துகொண்டு இருக்கும் கூட்டணிக்கு மீண்டும் நாம் உயிர்கொடுக்காமல் சாகவிடுவோம். எனவே ஆயுதம் தாங்கிய சகல இயக்கங்களும் முரண்பாடுகளின் மத்தியிலும் கூட தங்களுக்குள் ஐக்கியப்பட்டு போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.



## பொருளாதார சுபீட்சமும் விடுதலையும்

1970 இல் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் நாட்டில் தோன்றியிருந்த பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அரச முதலாளித்துவ அமைப்பினூடாக தீர்வுகாண முற்பட்டனர். முதலாளித்துவ அமைப்பின் கீழ் சிங்கள இனத்தினை திருப்திப்படுத்தும் நடவடிக்கைகளைச் செய்ய அரசு முற்பட்டது. சனத்தொகை அதிகரிப்புவேகத்திற்கேற்பபொருளாதாரவளர்ச்சி வீதம் அமைந்திருக்கவில்லை. கைத்தொழில் அபிவிருத்தி,நவீனமயமாக்கப்பட்ட விவசாய அபிவிருத்தி என்பன செய்யப்படாத பட்சத்தில் அரச கூட்டுத்தாபனங்களில் உத்தியோகங்களை நோக்கி மட்டும் வேலை தேடும் சூழ்நிலை அமைந்திருந்தது. உற்பத்தி அபிவிருத்தி இல்லாமல் இந்த உத்தியோகத்துக்கான வாய்ப்புகள் மிக ஒடுங்கலானது. ஒடுங்கலான வேலைவாய்ப்புள்ள உத்தியோகத்தையாவது பெற்றுவிடவேண்டுமென்றபோட்டி தமிழ், சிங்கள கல்விகற்றோர் மத்தியில் தோன்றியது. குறிப்பாக வடக்கைப் பொறுத்தவரையில் வரண்ட வலயமாக இருந்தமையாலும், திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படாமையாலும், மக்கள் இயல்பாகவே பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய வாய்ப்புகள் இல்லாமையும், கல்வி சார்ந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உத்தியோகத்தின்மீதுதான் ஒவ்வொரு தாயினதும் எண்ணமும் தந்தையினது எண்ணமும், ஒவ்வொரு சிறுவன் சிறுமியினது எண்ணமும் குவிந்திருந்தது. அல்லது குறைந்த பட்சம் சமூகத்தின் விழுமியம் உத்தியோகமாகவே இருந்தது.

ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பு ஏற்பட்டாலும் கூட நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எதனையும் தீர்த்துவிட முடியாது. பிரதானமாக பொருளாதாரத்துறையினை எடுத்துக் கொள்வோமாயின் எமக்கென ஒதுக்கப்படக் கூடிய மாநில அரசிற்கு பொருளாதார சுயாதிக்கம் இருக்கமாட்டாதென்பது தெளிவானது. ஏனெனில் பொருளாதார சுயாதிக்கம் இருந்தால் தமிழ் மாநிலம் வளர்ச்சியடைந்து இறுதியில் அதுவே தனியரசாக மாற வழிவகுத்துவிடுமென்ற அச்சத்தின் காரணமாக சிங்கள ஆட்சியாளர் தமிழ் மக்களின் மாநிலத்திற்குப் பூரண பொருளாதார சுயாதிக்கம் ஏற்படவிட மாட்டார்கள். உதாரணமாக, பாரிய கைத்தொழிற்சாலைகளை எமது கட்டுப்பாட்டில் அமைக்க அனுமதிக்க மாட்டார்கள்.

எனவே பொதுவாக நோக்கும் பொழுது நாம் எதிர்நோக்கும் சமூக, அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகள் எதனையும் சமரசப் பாதைகளினால் இலங்கை என்ற ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் வைத்து ஒருபோதும் தீர்க்கமுடியாது. நாம் எதிர்நோக்கும் காணியில்லாப் பிரச்சினை, வீடில்லாபபிரச்சினை, வேலையில்லாப்பிரச்சினை, கல்வியில்லாப்பிரச்சினை ஆகிய எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்கமுடியாது. நாம் எதிர்நோக்கும் சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் மிகவும் ஆழமானது. 70களில் எமது போராட்டம் உத்வேகம் பெற்றமைக்குப் பின்னணியாக இருந்த அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையை ஆராய்வோம்.

சுயபாஷைக் கல்வியின் மூலம் சிங்கள மக்கள் பக்கம் இருந்து அதிகளவு தொகை படித்த மக்கள் தோன்றத் தொடங்கியதும் அவர்களது வெளிவரவுக்கு ஏற்ப வேலைவாய்ப்புகள், உயர் கல்வி வாய்ப்புகள் இல்லாதிருந்தன. எனவே மிகச்சிறு அளவிலான வரையறையுள்ள கல்வி உத்தியோகம் போன்றவற்றிக்கு அதனையும் விட பன்மடங்கு கூடிய தொகையில் சிங்கள இளம் சந்ததியினர் வெளிவரவே கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றில் பெரும் நெருக்கடிகள் தோன்றின. அந்நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு இன விகிதாசாரம் புகுத்தப்பட்டது. இதன் விளைவால் தமிழர் [illegible] பொருளாதாரம் பற்றிய நம்பிக்கைகளை இழந்து விரக்தி



யுறத் தொடங்கினர். இக் கல்வி, வேலைவாய்ப்பு பற்றிய பிரச்சினைகள் கூர்மையடைந்து வெளிவரவே 70ஆம் ஆண்டு தரப்படுத்தலையொட்டித் தமிழ் இளைஞர்கள் நேரடி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். உயர் கல்வி கற்பதற்கும், வேலைவாய்ப்புக்குமான பிரச்சினை மட்டும்தான் தமிழர்களின் பிரச்சினை என்பது அல்ல. பொருளாதார ரீதியாக வீடற்றோர், நிலமற்றோர், அடிப்படைக்கல்வி கூட கற்கவசதி இல்லாத மக்கள் பல்கிப் பெருகி வந்தனர். ஆனால் அவர்களுககு அரசியல் தலைமை கிடைத்திருக்கவில்லை. மத்திதர வர்க்கத்துக்குத் தான் அரசியல் தலைமை கிடைத்தது. ஏனெனில் அரசியல் தலைமை மேற்தர மத்திய வர்க்கத்தின் தலைமையாக இருந்தது.

எந்த வித பொருளதார விருத்திக்குமான சாத்தியக் கூறுகள் இல்லாது போகவே ஒரு புறத்தில் வேலையற்றோர் என்னும் ஒரு படை, பொருளாதர வாய்ப்பற்றோர் என்னும் படை போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கின. இப்போது எமது தமிழீழ விடுதலைப் போராட்டமானது சகல மக்களும் தழுவிய காணியில்லா, வீடில்லா பிரச்சினை, சீதனப்பிரச்சினை, (சீதனப் பிரச்சினையென்பது அடிப்படையில் காணி, வீடு, தொழில் பற்றியதாகும்) கல்வி, சுகாதாரம் ,வேலைவாய்ப்பு ஆகிய சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும். எல்லாம் மக்களினதும் செம்மையான வாழ்வு இன ரீதியான ஒடுக்கு முறையின் பெயரால் தடுக்கப்படுகிறது. எனவே இவ்வாறான பிரச்சினைகள் தீர தமிழீழத்தினை விடுவித்து சோசலிச அரசை அமைப்பதன் மூலமே தீர்க்கமுடியும். இதனை விடக்குறைந்த பட்சத்தீர்வு என்ற ஒன்றும் இல்லை.

## அடிப்படை அம்சங்கள் கவனிக்கப்படாமை

போராளிகள் மீதான பயங்கரவாதிகள் என்ற பதப்பிரயோகத்தினை வாபஸ் பண்ணாமல், அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படாமல் இந்தியாவின் வற்புறுத்தலுக்கு கீழ்படிந்து பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டமை. போராட்டத்தில் இயக்கங்கள் பலமுற்றிருக்கவில்லையென்பதைத்தான் காட்டுகின்றது. நாம் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை, சிங்களக் குடியேற்றப் பிரச்சினை, தொடர்ந்தும் சிங்களக் குடியேற்றங்களைச் செய்வேன் என்று ஜே. ஆர். இறுமாப்புடன் கூறிக்கொண்டு இருக்கும் வேளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யின் இக்குடியேற்றங்கள் பற்றி ஒரு தெளிவான கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. 48 ஆம் ஆண்டின் பின் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களக் குடியேற்றக்காரர் அனைவரும் தமிழ்ப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படவேண்டும் என்பது எமது பிரதான கருத்தாக முன்வைக்கப்படல்வேண்டும். இதனைக் கருத்தில் கொள்ளாத எந்த வாதப்பிரதிவாதங்களும் அடிப்படையில் பயனற்றதாகும். குறிப்பாக முஸ்லிம் மக்களது பாரம்பரியப் பிரதேசமாகிய அம்பாறை பறிபோயுள்ளது. இது ஓர் உடனடிப் பிரச்சினையாகும். இவ்வுடனடிப் பிரச்சினையையிட்டுப் பேசப்படாமை வேதனைக்குரியது.

1981 ஆம் ஆண்டு குடிசன புள்ளிவிபரங்களின்படி திருகோணமலை மாவட்டத்தில் ஏறக்குறைய தமிழ் மக்களின் அளவுக்கு சிங்களக் குடியிருப்பாளர்கள் தொகை அதிகரித்துள்ளது.

பிரச்சார நோக்கிலும் கூட இதனையிட்டு அரச தரப்பினருக்கும், இந்தியாவுக்கும் நாம் வற்புறுத்தி இருக்கவேண்டும். இங்கு ஒரு முக்கிய விடயத்தினை உணர்த்தவேண்டியுள்ளது. அதாவது மகவலியின் குடியேற்றங்களில் (சிங்களப் பகுதிகளில்) பல இலட்சக்கணக்கான சிங்கள மக்களைக் குடியேற்றவிருப்பதாக அறிவிக்கும் அரசு ஏன் எமது பகுதிகளில் குடியேற்றப்பட்டுள்ளவர்களை மகாவலிப் பகுதிகளில் மீளக் குடியேற்ற முடியாது? இந்திய அரசு அசாம் மாநிலத்தில் 70 ஆம் ஆண்டுக்குப்பின் குடியேறிய வெளிமாநில மக்களை வெளியேற்ற ஒப்புக்கொண்டதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அத்துடன் எமது ஆயுதப் போராட்டங்களின் விளைவாக நஷ்டமடைந்த சிங்கள மக்களுக்கு அரசு நஷ்டஈடுகளை வழங்கியுள்ளது அதேவேளை அரச ஆயுதப்படையினரால் கொன்று குவிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும், அழிக்கப்பட்ட உடமைகளுக்கும், தமிழின அழிப்புக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் என்ற ஒரு வார்த்தையைக் கூட இப்பேச்சுவார்த்தையில் காணப்படவில்லை.

## முடிவுரை

35வருடகாலமாக வரலாற்றில் நடைபெற்ற சாத்வீகப்போராட்டங்களில் அரசுக்குஎவ்வித பொருளாதார நஷ்டங்களோ அரசியல் நிர்வாக நெருக்கடிகளோ ஏற்படவில்லை. கடந்த 10 ஆண்டுகால



ஆயுதப்போராட்டம்தான் அரசுக்கு பொருளாதார ரீதியான இழப்புக்களுக்கும், உள்நாட்டு, சர்வதேச ரீதிரியிலான அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கும் முகம்கொடுக்க நிர்ப்பந்தித்துள்ளது. அந் நெருக்கடிகளின் விளைவே அரசு பேச்சுவார்த்தைக்கு முன்வந்தமையாகும். சர்வதேச உறவு பொறுத்து, அமெரிக்காவுக்கும் இந்தியாவிற்குமிடையேயான உறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினால் இலங்கை அரசை அமெரிக்க அரசு முழுக்க முழுக்க பாதுகாக்க முற்படாது என்ற எண்ணமும் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளமை இப்பேச்சுவார்த்தைக்கான முன்தளுநலாக அமைகின்றது. எனவே ஒரு காத்திரமான வடிவத்தைப் பெற்று முன்னேறியுள்ள எமது போராட்டத்தினை எந்தவொரு அரசினது நலனுக்காகவோ, அல்லது தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சந்தர்ப்பவாதிகளின் நலனுக்காகவோ நாம் சமரசம் செய்து போராட்டத்தினை அடகுவைக்கக் கூடாது என்பதனை வலியுறுத்துவதுடன், மேலாக எமது போராட்டத்தை பாதுகாப்போம், போராட்டத்தை வளர்த்தெடுப்போம்; அதனூடாகச் சோசலிச தமிழீழத்தை மலரவைப்போம் என்பதில் உறுதியாக நிற்போம்.

நோயாளி ஒருவன் தான், நலமாக இருப்பதாக நம்புவானாகில், அவன் தவறிழைக்கிறான் என்பதை முதலில் உணர்த்துவது தேவையாகும்."

"If a sick person believes himself to be well, it is necessary first of all to prove to him that he is badly mistaken."

Dmitry Pisarev

www.tamilarangam.net



நன்றி: ஐலண்ட்